# இருக்கின்றார் கலைஞர்; என்றென்றும் தலைவர்!



கலைஞர்க்கோர் நினைவிடம்;
கடும்உழைப்பு நிறைவிடம்!
தலைவர்க்கோர்
உறைவிடம்;
தமிழோசை உலவிடும்!
கலைகட்கோர் இருப்பிடம்,
கவினான கடலோரம்!
அலைகளோ வந்துவந்து
அடிதொட்டுப் புகழ்கூறும்;
வலைப்படா மீன்களோ
வாழ்த்திடத் துள்ளியெழும்;
தொலைவிலே சூரியன்
சுடர்க்கைகள் நீட்டிவரும்!

கலையெழில் பறவைகள்
களித்தொலி எழுப்பிடும்!
நிலையான பொன்மணல்
நேயமாய் நெருங்கிடும்!

மலைமீறி மேகங்கள்
மணிக்குடை பிடித்திடும்;
விலைமதிப்பு இல்லாமல்
விளங்குகிற முத்துகள்
இலைஉமக்கு ஈடென
எங்கெங்கும் இரைந்திருக்கும்!
சிலையான உமக்கிவை
சிறப்பெனினும் தமிழரின்
தலைமகன் அண்ணாவின்
தாள்மலர் அருகுறங்கும்
நிலையெவர்க்குக் கிட்டுமிங்கே?
நீள்வான்கை கொட்டுமன்றோ!
தண்பொழிலில் குயில்பாடும்
தமிழ்நகராம் திருவாரூர்
மண்ணிலே சிறந்ததென
மகிழ்ந்துரைக்கும்
மரபுண்டு;
விண்ணிலே ஒளிர்ந்திருந்த
விழுமிய சுடரொன்று
கண்ணிலே காட்சிதரக்
கலைஞர்எனப் பிறந்ததனால்
எண்ணிலாப் பெருமையென
இயம்புதலே ஏற்கின்ற
உண்மையாம்; ஊரோடு
நாட்டிற்கும்
ஒவ்வுமெனப்
பண்களை இசைக்கலாம்;
பகுத்தறிவில் களிக்கலாம்!

தேரோடும் திருவாரூர்
தெருக்களிலே நீர்அன்று
ஈரோடும் காஞ்சியும்
எழுப்பிய உணர்ச்சியில்
போராடும் இளைஞனாய்ப்
புறப்பட்ட நாள்முதல்
நீரோடும் காவிரிபோல்
நில்லாமல் இறுதிவரை
ஊரோடு மொழி,இன
உரிமையை அடைவதற்கு
யாரோடும் போராட
எழுந்தவர் அல்லவோ?

வேரோடும் கழகத்தின்
விழுதாகி மரமாகிப்
பேரோடும் புகழோடும்
பெருமிதமாய்த் திகழ்ந்தபின்னும்
போராடும் உணர்வுதான்
பொங்கியே வாழ்ந்தவரே!

நீராடும் கடலோரம்
நீள்துயில் அண்ணாவின்
சீராடும் திருவடிகள்
சேர்ந்திட வேண்டுமென்று
நேராடும் நீதிமன்ற
நிலைஆணை பெற்றபின்தான்
ஏராடும் கடற்கரையில்
இருக்கின்றீர் இறவாமல்!

தலையெடுப்பேன் என்றொரு
தறுதலை சொன்னபோது
சிலையுடைக்க மார்பினைச்
சிறுபயல் சிதைத்தபோது
உலையாக நெஞ்சங்கள்
ஊரெல்லாம் கொதித்தாலும்
கலக்கமே இல்லாமல்
கடுஞ்சினம் கொள்ளாமல்
இலக்கியம் புகன்றவர்நீர்!
இடுகின்றான் மார்பிலே
நிலைமாறிக் குத்துகள்;
நெஞ்சுக்கு முத்துகள்!
இலைகளின் சலசலப்பும்
எதிரிகள் பளபளப்பும்
குலைந்திடும் விரைவிலெனும்
கொள்கையில் உறுதியாய்
மலையாக நின்றவர்நீர்;
மாற்றாரை வென்றவர்நீர்!

தலையறுப்பேன் எனுந்தடியர்
தடமின்றிப் போயினர்;
இலையாகிக் காய்ந்தனர்;
ஏதிலராய் மாய்ந்தனர்;
தலைகொடுப்பேன் என்றநீர்
சரித்திரம் ஆயினீர்!
கொலைகாரக் கும்பல்தான்
கூடாத பழிசுமத்திக்
கலகங்கள் விளைத்தாலும்
கறைபூசிக் களித்தாலும்
உலகந்தான் நம்பவில்லை;
உளறும்பொய் வெல்லவில்லை!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

குலவுகின்ற தென்றல்நீர்!
கொதித்தெழுந்தால் தீயும்நீர்;
இலகுகின்ற கடலும்நீர்;
இமயமாம் மலையும்நீர்;
உலவுகின்ற நிலமும் நீர்;
ஒப்பற்ற தஞ்சைநீர்;
அலகிட்டுப் பார்க்கவும்
ஆகாத வானம்நீர்!

நெடுங்காலம் தமிழ்நாட்டை
நீர்மையாய் ஆண்டவர்நீர்!
விடுங்காலம் உயிர்,உமது
விழுமியம் புரியாமல்
கொடுக்க இடம் மறுத்தாலும்
குறுமனம் கொண்டாலும்
தடுக்கத்தான் முயன்றாலும்
தகவின்றி நடந்தாலும்
எடுக்கத்தான் குறையாத
இன்அமுத சுரபிபோல்
உடுக்கத்தான் உண்ணத்தான்
உறங்கத்தான்
உழைக்கத்தான்
நெடுகத்தான் நீர்ஆண்டு
நிரம்பத்தான் வழங்கினீர்
ஒடுக்கத்தான் பட்டவர்க்கும்,
ஒதுக்கித்தான் விட்டவர்க்கும்?

கெடுக்கத்தான் பார்த்திருந்த
கீழ்மனம் கொண்டவரை
முடக்கத்தான் நீதிமன்றம்
முன்வந்து தீர்ப்பிலே
அடுக்காது இதுவென்றும்
அண்ணாவின் அருகிலிடம்
கொடுக்கத்தான்
வேண்டுமென்றும்
கூறிய பின்னரே
படுக்கத்தான் போனவர்நீர்;
பகுத்தறிவு மானவர்நீர்!

ஆட்சியில் இருந்துநீர்
ஆற்றிய செயல்களுக்குச்
சாட்சியும் வேண்டுமோ?
தமிழ்நாட்டின் ஒவ்வொரு
மாட்சியும் உம்மாலே
மலர்ந்தது கூறுமே!
நீட்சியும் வந்தது;
நிகரற்றீர் என்றுலகம்
காட்சியும் தருகிறது;
காலமும் வளர்கிறது!

கேளுங்கள் தமிழரே!
கீழ்க்கதிர் அண்ணா,பின்
ஆளுங்கள் என்றவர்க்கு
அரசாட்சி தந்தீர்கள்!
தோளுக்குத் தோளாக,
தொண்டர்க்குத் தொண்டராய்
வாளுக்கு வாளாக
வாகையைப் பெற்றவர்!
நினைவிடம் உலகெங்கும்
நிரம்பவே உண்டெனினும்
தனைவென்ற கலைஞர்க்குத்
தமிழ்மரபாய் எழுப்பியுள்ள
மனைபோன்ற நினைவிடம்
மாண்புகள் நிறைவிடம்
புனைவுகள் எல்லாமே
புகன்றிடும் வரலாறு
தினையளவே, கலைஞரின்
செந்தழல் வாழ்க்கையோ
பனையளவு, மலையளவு;
பகர்வதோ பருக்கைதான்!

முனைவோர்க்கே வெற்றியென
முழங்கிய கலைஞரை
நினைவோர்க்குக் காலம்பொன்,
கடமைகண் என்பது
வினையாற்றல் மாந்தர்க்கு
வேண்டுமென விளம்புவதாம் !

முனைமுறியா வேல்போல
முப்போதும் எழுதுகோல்
தனைக்கொண்டு எழுதியவர்
தமிழ்கொண்ட வழுதியவர்!
சுனையாற்று நீர்போலச்
சுவையாக, சுடராக
வனைந்தவர்; வளர்ந்தவர்!
கனைகுரல சிவாஜியால்
கனல்பெற்ற உரையாடல்
நினைத்தாலே உணர்ச்சிதான்
நெஞ்சிலே பாயுமே!
முனைந்தாலும் எழுதுதற்கு
முடியாது வேறொருவர்;
தினந்தோறும் மடலெழுதும்
திறனுளார் யாரொருவர்?

எத்தனையோ நினைவிடங்கள்
எழிற்சிலைகள் எழுப்பிய
முத்துவேலர் செல்வனுக்கு
முதல்வராய்த் தளபதி
தத்துகடல் அலைபாடத்
தலைமகன் அண்ணனுடன்
சித்தங்கள் உவகையுறச்
சிலிர்ப்பூட்டும் நினைவிடம்
வித்தகமாய் நிறுவியே
விழாக்காட்சி ஆக்கியுள்ளார்;
நித்தமங்குச் செல்பவர்க்கு
நெஞ்சிலெழும் எண்ணங்கள்
புத்தகமாய் அறிவூட்டும்;
புதிதென்றும் அழகூட்டும்!

கலைஞரே, தமக்கொரு
கங்கைகொண்ட சோழன்போல்
தலைமைக்கு ஏற்றமகன்
தளபதி முதல்வர்தாம்
கலையெழில் மேவிடும்
கருத்துலகம் ஒன்றினை
நிலையாக விளங்கிட
நிறுவிய மாட்சிதான்
உலகெலாம் பரவிடும்;
ஒப்பற்ற திருவிடம்!

உதிக்கின்ற சூரியன்
உயிரூட்டும் ஒளிபடக்
குதித்தெழும் கடல்அலைகள்
கோவென்று கொண்டாடக்
கதியான அண்ணாவும்
கலைஞரும் ஓய்வுறும்
புதிதான நினைவிடங்கள்,
புத்துலகப் புனைவிடங்கள்!
நிதியாகப் போற்றுவோம்;
நெஞ்சிலே ஏற்றுவோம்!

ஓலங்கள் உமக்கெதிராய்
ஒன்றிரண்டை எழுப்புவோர்
ஏலங்கள் போனவர்கள்,
ஏவலுக்குப் படிந்தவர்கள்;
கூளங்கள், அவைகளோ
கொத்தடிமைக் கூலிகள்;
தாளங்கள் போடுவோர்,
தப்பாமல் ஆடுவோர்
நீளங்கள் மக்கள்தாம்
நிரம்பவே அறிவார்கள்!

கோலங்கள், நீர்கொண்ட
கொள்கைகள் மக்களுக்குப்
பாலங்கள், எப்போதும்
பயன்தரும் பாடங்கள்!
காலங்கள் மறைந்தாலும்
கலைஞரே, தலைவரே!
நீலவான்போல் நீர்என்றும்
நீளுவீர்; நிலையாவீர்!



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்ட வீ.ஜெகதீசன் சென்னையில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது மேனாள் ஒன்றிய அமைச்சர் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.

### ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்

# வேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

வேலூர், மார்ச் 4-

வேலூர் சட்டமன்ற தொகுதி சார்பில் தொகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் பி. எல் .ஏ .2 முகவர்கள் மற்றும் பிஎல். எல். சி உறுப்பினர்கள் ஆகியோரின் ஆலோசனைக் கூட்டம் பேபி மஹாலில் நடந்தது.

கூட்டத்துக்கு மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் தி.அ. முகமது சகி, நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், தொகுதி மேற்பார்வையாளர் ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா, நம்மையெல்லாம் உருவாக்கிய முத்தமிழ் அறிஞர் தமிழின தலைவர் கலைஞர் ஆகியோர்களின் ஒட்டுமொத்த உருவமாகவும் குரலாகவும் இருந்து நம்மிடையே வாழ்ந்து கொண்டு, தமிழ் சமுதாயம், தமிழ் கலாச்சாரம் தமிழ் பண்பாடு உயர சமத்துவம், சகோதரத்துவம், மதசார்பின்மை என அனைத்தும் அனைவருக்கும்கிடைத்திட இரவு பகல் பாராமல் பணியாற்றி தமிழக அரசிற்கும், கழகத்திற்கும் தலைமை ஏற்று நடத்தி வரும் குறிஞ்சி மலர் நாயகன், திராவிட மாடல், அரசின் பேரரசர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற தமிழ்நாடு முதல்வரும் கழகத்தின் தலைவருமான தளபதியார் அவர்களின் பிறந்த நாள் மார்ச் 1. அன்றைய தினமே நமக்கெல்லாம் எழுச்சி நாள். 71ஆவது பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் பல்லாண்டு காலம் வாழ வேலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் மாநகர தி.மு.க. சார்பில் நெஞ்சார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவித்துக்கொள்வதோடு பிறந்த நாளை முன்னிட்டு தொகுதிக்குட்பட்ட 36 வட்டக் கழகங்களிலும் கழக இருவண்ணகொடியேற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி இல்லம் தோறும் தலைவரின் குரல் என்ற பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என கழகத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு, இணங்க வேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 243 பூத்துகளில் உள்ள வாக்காளர்களை எல்லாம் தேடி நேரில் சந்தித்து, பரப்புரை மேற்கொள்வது எனவும், இப்பணியில் மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் மாநில அணிகளின் நிர்வாகிகள் வட்டக் கழக, நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதி நிதிகள், அணிகளின் நிர்வாகிகள், குறிப்பாக பாக முகவர்கள் என அழைக்கப்படும் பி. எல். ஏ. அவர்களோடு பாகத்திற்கு 10 பேர் என நியமிக்க பட்டிருக்கும் பி.எல். சி ஆகியோர்கள் ஒருங்கிணைந்து நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பூத்துக்களிலும் 50 வீடுகள் என கணக்கீடு செய்து கழக அரசின் திட்டங்களை எடுத்துரைத்து துண்டு பிரசுரம் வழங்கி திண்ணை பரப்புரை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வங்கக்கடலோரம் மறைந்து மறையாமலும் துயில் கொண்டிருக்கும் இந்த இயக்கத்தினை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தை புதுப்பொலிவுடன் புதுப்பித்தும் தமிழ் சமுதாயம் மேன்மை அடைய அடித்தட்டு விளிம்பில் உள்ள மக்களும் பயன்பெறும் வகையில் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்வராக இருந்து பல்வேறு திட்டங்களை தீட்டி நல்லாட்சி மேற்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர், அவர்களின் நினைவிடத்தை உருவாக்கி இந்திய அரசியல் வரலாற்றில் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் தலைவர் கலைஞரின் புகழ் நிலைத்திருக்கும் வகையில் அவர் செய்திருக்கும், சாதனைகளை நம் கண் முன்னே நிறுத்தி நினைவகத்தில் அருங்காட்சியகம் மற்றும் நூலகம் அமைத்து தந்து, திறந்து வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கும் தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் கழகத்தின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கும் நினைவிட பணிகளை மேற்கொண்ட பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

விரைவில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் அவர்களால், நம்மிடையே ஒப்படைக்கப்படும் வேட்பாளருக்கு கழகத்தின் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி, இரவு பகல் பாராமல் பணியாற்றி வாக்குகளை சேகரிப்பது, எனவும் பாராளு மன்ற தொகுதிக்கு உட்பட்ட சட்ட மன்ற தொகுதிகளில் வேலூர் சட்ட மன்றத் தொகுதி அதிக வாக்குகளை பெற்று தந்தது என்ற, பெருமையை உருவாக்கி, தரும் வகையில் மாநகர கழக நிர்வாகி கள், பகுதி கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பி னர்கள் மாநில அணிகளின் நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் குறிப்பாக பாக முகவர்கள் என அழைக்கப்படும் பிஎல்ஏ-2 அவர்களோடு பாகத்திற்கு பத்து பேர் என நியமிக்கப் பட்டிருக்கும் பி.எல்.சி ஆகியோர்கள், ஒருங்கிணைந்து தேர்தல் பணியினை இன்று முதல் மேற்கொள்வதென கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

ஆண்டுதோறும் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ரமலான் பண்டிகை கொண்டாடும் ஏழைஎளிய இஸ்லாமிய பெருமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, வழக்கம்போல் இந்தாண்டு ரமலான் பண்டிகையின் காலங்களில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளதால், மார்ச் முதல் வாரத்தில் இஸ்லாமிய பெருமக்கள் 5071 நபர்களுக்கு பிரியாணிக்குத் தேவையான பொருட்களும் இறைச்சி, வாங்கிக் கொள்ள ரூ.200 வழங்கப் பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பு செய்யுமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இன்று (4ம் தேதி) சிவகங்கையில் முதல்வர் பிறந்த நாள் -

# அரசின் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

சிவகங்கை, மார்ச் 3-

தமிழகம் முழுவதும் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாளும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டங்கள் மூன்று நாட்கள் நடைபெற்று வருகின்றது. இதில் இன்று (4ம் தேதி) சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் மாலை 6 மணி அளவில் சண்முகராஜா கலையரங்கில் நகர் கழகச் செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையில். நடைபெறுகின்ற பொதுக்கூட்டத்தில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. கே.முருகவேல் ஆகியோர் சிறப்புரையாற்று கிறார்கள்.

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். பொதுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் தலைமையில் நகர் கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.



கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க "எல்லோருக்கும் எல்லாம்" என்ற தலைப்பில் திராவிட மாடல் நாயகரின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட – நகர திமுக சார்பில், நடைபெற்றது. கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற கூட்டத்தில் நகர செயலாளர் எஸ்.கே.நவாப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப் வரவேற்புரை ஆற்றினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் ,கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜய் , கழக மாநில வர்த்தக அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் காஞ்சனா கமலநாதன் , வெற்றிச்செல்வன் , மணிமேகலை நாகராஜ் , நாகராஜ், டேம் வெங்கடேசன் , கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி , கதிரவன், செந்தில், கிருபாகரன் , பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன் ,அஸ்லாம், நாகராசன் , கோதண்டன் , சித்ரா சந்திரசேகர் மற்றும் அன்பரசன் கே.வி.எஸ். சீனிவாசன் , அமீர்சுகேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.